**SEKOLAH JENIS KEBANGSAAN TAMIL TASEK PERMAI**
**KOMPLEKS SEKOLAH WAWASAN,**
**14120 SIMPANG AMPAT,** Kod Sekolah : PBD4030
**SEBERANG PERAI SELATAN.** No.Tel : 04-5872304
E-mail : pbd4030@jpnpp.edu.my sjkttasekpermai@gmail.com

---

<u>நான் ஒரு தொலைக்காட்சி</u>

நான் ஒரு தொலைக்காட்சி. விந்தைமிகு அறிவியல் கண்டுபிடிப்பில் நாளுக்கு நாள் மக்களைக் கவர்ந்திழுக்கும் ஓர் ______ திகழ்கிறேன். இன்று வீடுகளிலும், வணிக மையங்களிலும், தங்கு விடுதிகளிலும் நான் நீக்கமற நிறைந்திருக்கிறேன். நான் ஒரு நவீனத் தொலைத்தொடர்பு சாதனமாவேன். தொலைவில் நிகழும் காட்சிகளைக் கொணர்ந்து காட்டுவதால் ______ என அழைக்கப்படுகின்றேன்.

நான் ஜப்பான் நாட்டில் உருவாக்கப்பட்டேன். அதுதான் நான் பிறந்த இடமும்கூட. எனக்கு ‘விவாஷ்’ என்று பெயர் சூட்டப்பட்டது. நான் அதிநவீனமான மின்னணு தொழில்நுட்பத்தைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளேன். என் செவ்வக அமைப்பால், நான் அழகாகவும் கண்கவர் வகையிலும் காணப்படுவேன். உலகில் பலராலும் பார்க்கப்படும் சிறந்த பொழுதுபோக்குச் ______

நானும் என் சக தோழர்களும் மலேசியாவில் ______ புகுந்தபின், மின்னியல் பொருள்கள் விற்கப்படும் கடையில் காட்சிக்கு வைக்கப்பட்டோம். என்னுடைய அழகு, வனப்பு, திறமை, கம்பீரம், பயன்பாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு எனக்கு RM 2500.00 என விலையிட்டிருந்தார்கள். விற்பனை நாளின்போது, ______ ஒருவர் என் விலையைப் பொருட்படுத்தாமல் என்னை வாங்கிச் சென்றார். புன்னகை தவழும் முகத்தோடு தம் வீட்டின் வரவேற்பறையில் ஓர் அழகிய மேசை மீது என்னை அமர்த்தினார்.

என்னுள் ______ புதிய அலைவரிசைகள் புகுத்தப்பட்டிருந்தன. வீட்டில் உள்ள அனைவரும் தங்களின் ஓய்வு நேரத்தை நல்வழியில் செலவழிக்க நான்

**ஆக்கம் : ஷாமினி சந்திரன்**

LIVEWORKSHEETS

பெரிதும் துணைபுரிந்தேன். என்னுள் __________ அனைத்து நிகழ்ச்சிகளும் மனத்திற்கு மகிழ்ச்சியைத் தந்தன. என் முதலாளியின் பெற்றோர் இலக்கிய நிகழ்ச்சிகள், வரலாற்றுப் படங்கள் ஆகியவற்றைக் கண்டுகளிப்பர். அவரது மனைவி மகளிருக்கான நிகழ்ச்சிகளையும் வீட்டின் குழந்தைகள் கல்வி தொடர்பான பொது அறிவை வளர்க்கக்கூடிய நிகழ்ச்சிகளையும் பார்த்துப் பயன் பெறுவர்.

என் முதலாளி வணிகத் துறையில் ஈடுபட்டுள்ளதால், அதன் தொடர்பான செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் பார்ப்பார். வணிகம் தொடர்பான கலந்துரையாடல், படைப்பாற்றல், நுணுக்கங்கள் ஆகியவற்றின்வழி கிடைக்கப்பெறும் புதிய சிந்தனைகளைப் படிக்கற்களாக வைத்து வெற்றியைத் தேடித்தரும் வழிகளைக் கண்டறிவர். மேலும், உள்நாட்டு,வெளிநாட்டு நடப்புகளை அறிந்து கொள்வார்.

என் முதலாளியின் மகன் விளையாட்டு அலைவரிசையில் __________ நிகழ்ச்சிகளை இரத்துப் பார்ப்பார். வேகத்திற்கும் விவேகத்திற்கும் என் பங்களிப்பு அதிகரித்துக் கொண்டே இருந்தது.

தொடக்கக் காலத்தில் எப்படி __________ தோற்றத்துடன் மிளிர்ந்தேனோ இப்பொழுதும் அப்படியே காட்சியளிக்கின்றேன். என் எஜமானரும் அவர்தம் குடும்பத்தினரும் என்னைக் கண்ணினைக் காக்கும் இமை போலக் காத்து வருகின்றனர். அன்பான முதலாளியின் __________ நான் நீடித்து வாழ்வேன்.

| | | | |
|---|---|---|---|
| அரிய ஊடகமாகத் | அரவணைப்பில் | பற்பல | வணிகர் |
| சாதனமாவேன் | தஞ்சம் | காற்பந்து | |
| ஒளிபரப்பப்படும் | மிடுக்கான | தொலைக்காட்சி | |

ஆக்கம் : ஷாமினி சந்திரன்

LIVEWORKSHEETS